(உ) காலஞ்சென்ற திரு. பிலிப் குணவர்தனவின் தத்துவம் தொடர்பில் வசதிகுறைந்த மற்றும் ஓரங்காட்டப்பட்ட குழுக்களின், குறிப்பாக இலங்கை இளைஞர்களின், சமூக, கல்வி மற்றும் கலாசார அபிவிருத்தியை வளர்த்தலும் மேம்படுத்தலும் ;

(ஊ) காலஞ்சென்ற திரு. பிலிப் குணவர்தனவின் ஞாபகத்தையும் தத்துவத்தையும் பின்வருவனவற்றின் மூலம் பரப்புதல் :-

(i) அநாதை இல்லங்கள் மற்றும் வயோதிபர் இல்லங்கள் போன்ற நிறுவனங்களைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் இயைபான அதிகாரிகளுக்கு உதவுதல் ;

(ii) வேலையற்ற இளைஞர்களிடையே சுயதொழிலை மேம்படுத்தும் நோக்குடன் வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவனங்களைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் அத்துடன் நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் வேறு அவசியமான உதவிகளை வழங்குவதன் மூலம் தொழில் முயற்சிகளில் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கு அத்தகைய இளைஞர்களுக்கு உதவுவதற்கும் இயைபான அதிகாரிகளுக்கு உதவுதல் ;

(iii) முன்பள்ளி மற்றும் சிறுவர் கவனிப்பு நிலையங்கள் போன்ற நிறுவனங்களைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும் அத்துடன் அத்தகைய சிறுவர்களின் சேமநலனுக்காக நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைப்பதற்கும் நடைமுறைப்படுத்து வதற்கும் இயைபான அதிகாரிகளுக்கு உதவுதல் ;

